www.xtrapapers.com

UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2012**

**1 hour 30 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

This document consists of **4** printed pages and **4** blank pages.

DC (SM/JG) 47017/5
© UCLES 2012
UNIVERSITY *of* CAMBRIDGE International Examinations

[Turn over

www.xtrapapers.com



**BLANK PAGE**

© UCLES 2012 

www.xtrapapers.com



## Section A – Translation

**1** Translate into **English**.

தபால்காரர் கதவைத் திறந்து ஒரு பார்சலைப் போடும்போது, நாய் வெளியே போவதை அந்தச் சின்னப் பையன் பார்க்கவில்லை. நாய் தன்னுடைய வாலை ஆட்டிக்கொண்டு, தபால்காரரைத் தாண்டி தெருவில் போய்க் கொண்டிருந்தது. தபால்காரர் யாரையும் பார்க்கவில்லை. ஆனால் நாயின் சொந்தக்காரர் வருவார் என்று நினைத்தார். தெருக்கோடியில் நாய் மறையும் போது, ஒரு சின்னப்பையன் அழுவதைத் தபால்காரர் கேட்டார். திரும்பிப் பார்த்தபோது, அந்த நாயின் சொந்தக்காரரின் மகனான சின்னப் பையனைப் பார்த்தார். “என்னுடைய நாய் தொலைந்து விட்டது;' 'அது எங்கே போய்விட்டது என்று எனக்குத் தெரியவில்லை”. என்று அழுதான். “அதைக் கண்டு பிடிக்க என்னால் உதவ முடியும்” என்று தபால்காரர் அன்புடன் சொன்னார். இரண்டு பேரும் தெருக்கோடிக்குப் போனார்கள். அந்தச் சின்னப் பையன் நாயின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். ஒரு நிமிஷத்திற்கு பிறகு, யாரோ ஒருவர் வீட்டிலிருந்து அந்த நாய் வாலை ஆட்டிக்கொண்டு வெளியே ஓடி வந்தது. அந்தச் சின்னப் பையன் நாயைக் கட்டிக் கொண்டான். பிறகு தபால்காரர் பையனையும் நாயையும் வீட்டிற்குக் கொண்டு போய் விட்டார்.

[10]

**2** Translate into **Tamil**.

Murali and Uma were looking for a new house that they could afford to buy. They had lived for three years in a small rented house which had no garden. But now, Uma was pregnant and they wanted a bigger house with an extra bedroom and a little garden.

One Saturday, Murali and Uma went for a walk in an area of town that they liked, but they couldn't find any houses for sale. Tired after their walk, Murali bought ice creams and they sat down on the front wall of a pretty little house to eat them. Uma said to Murali that the baby would arrive soon and that perhaps they should forget moving house for now. Murali unwillingly agreed.

Behind them, they did not notice the old lady who had appeared in the garden of the little house. “I heard you both talking,” she said. “I have been thinking about selling this place.” Murali and Uma looked at each other. “I am not sure we could afford this,” said Uma sadly.

“Well, come and look around and then we can discuss that later,” the old lady said.

Twenty minutes later, Murali and Uma emerged from the house and thanked the old lady warmly.

[20]

www.xtrapapers.com



## Section B – Reading Comprehension

Read the following passage carefully and then answer the questions in **Tamil.**

இந்தியாவின் தலைநகரான டில்லி, கிறிஸ்து பிறப்பதற்கு முன்னால் இருந்தே சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது. டோமார் வம்சம் டில்லியை கிறிஸ்து பிறந்து 800 ஆண்டுகளாக ஆண்டு வந்தனர். அவர்களுடைய அரசர் டோமார் அனங்கபாலின் பெயரை டில்லியில் உள்ள இரும்புத்தூணில் பொறித்து இருப்பதை இன்றும் காணலாம்.

மதில் சுவரால் சூழப்பட்ட மொகலாயரின் பேரரசு 17ம் நூற்றாண்டில் இருந்து 19ம் நூற்றாண்டு வரை இருந்தது. இவர்களுடைய சமாதிகளும் கோட்டைகளும் பரவிக் கிடந்தன. பல சேதமடைந்தும் அல்லது அதற்கு மேலே பல கட்டிடங்கள் எழுப்பப்பட்டும் இருந்தன. யமுனை நதி ஓடும் கிழக்குப் பக்கத்தில் சுவர் இல்லாததினால் பல நூற்றாண்டுகளாகக் கொள்ளை அடிக்கப்பட்டது.

1947ம் ஆண்டு புதுடில்லி சுதந்திர இந்தியாவின் அதிகாரபூர்வ தலைநகராக ஆயிற்று. கட்டிட ரீதியாக புதிய நகரம் பழைய டில்லியிலிருந்து பெரிதும் மாறுபட்ட பாணியில் அமைக்கப்பட்டது. நகரின் புதிய பகுதிகளில் தெருக்கள் மிகவும் அகலமாகவும் இரண்டு பக்கங்களிலும் மரங்கள் நடப்பட்டும் இருந்தன.

பெரிய வர்த்தக நிறுவனங்களும் நிகழ்ச்சிகள் நடைபெறும் வீதிகளும் இருந்தன. இவை "இந்தியா கேட்" மற்றும் ஜனாதிபதியின் வீடான "ராஷ்டிரபதி பவன்" வரை போகிற மாதிரி அமைக்கப்பட்டிருந்தன.

டில்லியில் வாழ்நாள் முழுவதும் வசித்து வரும் ராம் சர்மா கூறுகிறார் "இது மிகவும் அருமையான இடம். பெரிய கடைத்தெருக்கள் நூற்றுக்கணக்கான உணவு வகைகள், விறுவிறுப்பான முக்கிய சாலைகள் ஆகியவற்றோடு உண்மையிலேயே டில்லி நகரம் உயிர்த்துடிப்புடன் இருக்கிறது." சில வெளிநாட்டுப் பயணிகள் முதல் தடவை இங்கே வரும்போது பயப்படுகிறார்கள். அவர்களுக்கு நெரிசலின் ஊடாக (சைக்கிள், கார் ஆகியவை) எப்படிச் செல்வது என்று தெரியாமல் விழிக்கிறார்கள். தங்குவதற்கு எது சிறந்த இடம், சாப்பிடுவதற்கு எது சிறந்த உணவு என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. முதலில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல் அவர்களுக்கு இருக்கும். டில்லியில் பார்ப்பதற்கும் செய்வதற்கும் ஏராளமானவை இருக்கின்றன. இங்கே வந்து பல இடங்களைப் பார்க்க வேண்டுமானால், டிரைவருடன் ஒரு காரை எடுத்தால் அவர் உங்களை நேராக அந்த இடங்களுக்கு அழைத்துச் செல்வார். பெரும்பாலான சுற்றுலா இடங்களை இரண்டே நாட்களில் பார்த்து விடலாம். எல்லா இடங்களையும் பார்த்து அநுபவிக்க வேண்டுமென்றால், கூடுதலாக சில நாட்கள் தங்கச் சொல்வேன்."

"டில்லியில் சில பகுதிகளை நீங்கள் பார்க்க விரும்பினால் ஒரு ரிக்ஷாவில் போகலாம். டிரைவருடன் வாடகைக் காரில் போவதை விட நீங்கள் மெதுவாகப் போய் இடங்களைப் பார்த்து சந்தோஷப்படலாம். அதற்குப் பதிலாக "மெட்ரோ ரயில்" எடுக்கலாம். அது ரிக்ஷாவை விட மலிவாகவும் இருக்கும். ஆனால் உங்களுக்கு டில்லியைத்

www.xtrapapers.com



தெரியாவிட்டால் எங்கு இறங்கவேண்டியது என்பதை அறிவது எப்போதும் எளிதாக இருக்காது."

"டில்லிக்கு வரும்போது பெரும்பாலான மக்கள் ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலைப் பார்க்க விரும்புவார்கள். ஆனால் செங்கோட்டை, குதுப்மினார், ராஜ்காட் போன்ற மற்ற புகழ்பெற்ற இடங்களும் உள்ளன."

ராம் சொல்கிறார், - "'டில்லியில் செய்வதற்கும் பார்ப்பதற்கும் நிறைய விஷயங்கள் இருக்கின்றன – இது தான் டில்லியில் எனக்கு வியப்பூட்டுகிறது". எனக்குப் பிடித்த விஷயம் – பல விதமான வாசனைகள் – சமையல் வாசனை, மலர்களின் வாசனை, ஊதுபத்தி வாசனை – இது ஒரு அற்புதமான இடம்."

Now answer the following questions in **Tamil** using your own words as far as possible.

**3** எந்த விதமான மக்கள் டில்லியை ஆண்டு வந்தனர் என்று இந்தப் பத்தியில் கூறப்பட்டுள்ளது? [2]

**4** மொகலாயர் காலத்தில் டில்லியின் இயற்கை அமைப்பு எப்படி இருந்தது. ஏதாவது இரண்டுஉதாரணங்கள் கொடுக்கவும். [2]

**5** டில்லியை கொள்ளையடிப்பது எளிதாக இருந்தது என்று ஏன் நீ நினைக்கிறாய்? [1]

**6** இந்தப் பத்தியில் புது டில்லி, பழைய டில்லியை விட வேறு மாதிரி அமைக்கப் பட்டு இருக்கிறது. புது டில்லியில் உள்ள மூன்று வேறுபாடுகளைக் கூறவும். [3]

**7** டில்லியில் என்ன இரண்டு விஷயங்கள் மக்களை அங்கு வசிப்பதற்குத் தூண்டுகிறது என்று ராம் இந்தப் பத்தியில் கூறியுள்ளார் [2]

**8** ஏன் வெளியூர்க்காரர்களில் சிலர் டில்லிக்கு வரும்போது மிகவும் பயப்படுகின்றனர் என்பதை விளக்கமாகக் கூறவும். [3]

**9** டில்லியைச் சுற்றிப் பார்க்க ஓட்டுனர் ஓட்டும் காரை வாடகைக்கு எடுத்தால் ஏற்படும் ஒரு நன்மை/ தீமையைக் கூறவும் [2]

**10** பத்தி 5ல் ராம் டில்லியில் சுற்றிப் பார்ப்பது பற்றி பேசுகிறார். அவருக்கு எதில் பிரயாணம் செய்யப் பிடிக்கும் என்று நீ நினைக்கிறாய்? ஏன்? [2]

**11** தாஜ்மஹாலைத் தவிர உல்லாச யாத்திரிகர்கள் டில்லியில் எந்த இடங்களைப் பார்க்க விரும்புவார்கள் என்று இங்கே கூறப்பட்டுள்ளது? ஏதாவது இரண்டு இடங்களைக் கூறவும். [2]

**12** ராமுக்கு டில்லியில் மிகவும் பிடித்தது என்ன? [1]

Language and Spelling [5]

**Total Marks [25]**

www.xtrapapers.com



**BLANK PAGE**

© UCLES 2012

www.xtrapapers.com



BLANK PAGE

© UCLES 2012 

www.xtrapapers.com



**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2012